# புறநானூற்றில் புலப்படும் சம்ஸ்கிருதச் சிந்தனைகள்

**பாலகைலாசநாதசர்மா. ம**
தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத்துறை, இந்துக்கற்கைகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**நவநீதகிருஷ்ணன்,சு.**
சிரேஷ்ட உதவி நூலகர்,
நூலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு இலக்கியப் பரப்புகளில் சம்ஸ்கிருத மொழியோடு தமிழ் கொண்டிருந்த தொடர்பிற்குப் பல சான்றுகள் உள்ளன. அவ்வகையில் புற நானூற்றின் வழியாகப் புலப்படும் தமிழ்-சம்ஸ்கிருத உறவுகள் குறித்த தனித்துவமான செய்திகளைத் தொகுத்தாராயும் நோக்குடன் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படவுள்ளது. புறநானூற்றில் பொதிந்திருக்கும் சம்ஸ்கிருதச் சிந்தனைகளையும் கருத்தியல் களையும் வெளிக்கொணர்தலே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும் இதற்க மைய வைதீக இலக்கியச் சிந்தனைகளும் கருத்துக்களும் வேதாங்கங்கள் பற்றியும் புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது. புறநானூற்றில் தேவை யான இடங்களில் சம்ஸ்கிருதப் புராணங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் தத்துவநூல்களிலிருந்தும் பொருத்தமான செய்திகளை எடுத்துக்காட்டிக் கூறி விளக்கும் பண்பினைக் காணமுடிகின்றது. அத்துடன் சம்ஸ்கிருத மொழியிலமைந்த சிவாகம வழிபாட்டுமுறை குறித்த செய்தியும் புறநானூற்றில் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க லாம். மேலும் மணிப்பிரவாளர் நடை தோற்றம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூற்றுக்காலத்தில் சம்ஸ்கிருதச் சொற்கள் பல தமிழில் தற்பவம் தற்சமம் என்ற இருநிலைகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாகப் புறநானூற்றின் உள்ளடக்கத்தை முறையாக ஆராய்ந்து பெறப்பட்ட சிந்தனைக்கூறுகள் பலவற்றில் கூறப்பெற்றுள்ள - இடம்பெற்றுள்ள - சம்ஸ்கிருதச் சிந்தனைகள் இவ்வாய்வின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** சங்கஇலக்கியம், தமிழ், சம்ஸ்கிருதம், ஒப்பியலாய்வு

## அறிமுகம்

உலகின் செவ்வியல் மொழிகளாகவும், தொன்மை மொழிகளாகவும் கிரீக், இலத்தீன், சீனம், எபிரேயம், தமிழ், சம்ஸ்கிருதம் ஆகியன கருதப்படுகின்றன. இவற்றுள் தமிழும் சமஸ் கிருதமும் இந்தியாவைத் தனது தாய்நாடாகக் கொண்டிருந்த போதிலும் உலகின் பல நாடுக ளிலும் பரந்து விளங்கும் சிறப்புடையன. ஒரு மொழியுடனான மற்றொரு மொழியின் தொடர்பு மிகச் சாதாரணமாக நிகழ்ந்துவிட இயலாது. ஒரு மொழியின் சமூக, அரசியல், பண்பாடு, கல்வி ஆகிய தளங்களில் மற்றொரு மொழிபெறும் வகி பாகத்தினை அடிப்படையாகக் கொண்டே மொழி யிடைத்தொடர்பை நாம் கண்டுகொள்ளமுடியும். இவ்வகையில் தமிழ்ச் சமூகப் பண்பாட்டு இலக் கியப் பரப்புகளில் சமஸ்கிருத மொழியோடு தமிழ் கொண்டிருந்த தொடர்பிற்குப் பல சான்று கள் உள்ளன. அக்காலத் தமிழ்ப்புலமை பெற்ற சமஸ்கிருத அறிஞர்களும் சம்ஸ்கிருத மொழிப் புலமை பெற்ற தமிழறிஞர்களும் பண்டிதர் களும் இயல்பாகவே இருமொழிப் புலமையை மையப்படுத்திய தமது ஆக்கங்களால் தமிழை வளப்படுத்தி வந்தனர். இச்சூழலினால் மொழிக ளிடையிலான இடைத்தொடர்புகள் அதிகரிக்க லாயின. இருமொழிகளும் இலக்கண, இலக்கி யமரபுகள், கருப்பொருள், வடிவம், நடை என்ப வற்றைத் தம்முள் பரிமாற்றம் செய்தபடி காலந் தோறும் தம்முட் கலந்தே வளர்ந்தன.

## புறநானூறு - ஓர் அறிமுகம்

இந்நிலையில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக நானூறு பாடல்களைக் கொண்ட புறத் திணை சார்ந்த சங்கத் தமிழ் நூலாக விளங்குவது புறநானூறு. சுவடிகளில் பேணப் பட்டுவந்த இந்நூலைப் பாதுகாக்கும் வகையில், சாமிநாதையர், உ.வே. (1894) அவர்கள் முதன் முதலாக நூலுருவில் பதிப்பித்து வெளியிட்டார். இந் நூலில் அடங்கியுள்ள பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட் டவை. புறநானூற்றின் பாடல்கள் சங்ககாலத் தில் ஆண்ட அரசர் களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன. குறிப்பாகப் பண் டைத் தமிழ் நிலமாண்ட மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள், புல வர் பெருமக்கள், அக் காலத் தமிழ் மக்களின் வாழ்வியல், அரசியல், சமூகம், பொருளாதரம், கல்வி, நாகரிகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங் கள், வாணிபம் போன்ற பல செய்திகளைப் புறநானூறு வழியாக அறிய முடிகிறது. இந்நூல் தமிழர் வாழ்வின் மரபுவழிச் செய்திகளைக் காட்டும் காலக்கண்ணாடியாக அமைந்துள்ளது. புறநானூற்றுப் பாடல்களில் கூறப் பெற்றுள்ள - இடம்பெற்றுள்ள - சம்ஸ்கிருத சிந்தனைக் கூறுகளை நுணுகி நோக்கி வெளிக் கொணரும் முயற்சியாக இவ்வாய்வு அமைகிறது

## ஆய்வின் தேவை

சம்ஸ்கிருதத்தின் மீதான மொழியுணர் வும் ஆர்வமும் குறைவடைந்து வரும் இன்றைய சூழமைவில் சங்ககாலம் முதல் தமிழுடன் இணைந்து வாழ்ந்த மொழியாக சம்ஸ் கிருதத்தினை அறிமுகம் செய்வதன் மூலம் சம காலத் தமிழர்களின் உள்ளங்களில் சம்ஸ் கிருதம் தொடர்பான உணர்வு குறித்த மீளாய்வுப்பார்வைக்கு இவ்வாய்வு வழி சமைக்கின்றது. சங்கப்பாடல்கள் தொடர்பாகத் தனித்தும் தொகுத்தும் மேலும் ஆழமான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதனூடாகச் சங்கப்பண்பாடு குறித்த ஒரு முழுமையான பார்வையைப் பெற் றுக்கொள்ளலாம் என்ற பேராசிரி யர் சிவத்தம்பி (2007) அவர்களின் கூற்றின் வழியில் புறநானூற்றின் வழியாகப் புலப்படும் தமிழ்-சம்ஸ்கிருத உறவுகள் குறித்த தனித்துவமான செய்திகளைத் தொகுத்தாராயும் நோக்குடன் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. சம்ஸ் கிருதமும் தமிழும் இணைத்து வளர்க்கப்பட வேண்டிய

காலத்தை நோக்கிய மீள்பயணத் திற்கான ஆரம்பவிசையாகவும் இது அமைகி றது. சமுதாயமட்டத்தில் மொழிச்சிந்தனைக ளைத் தூண்டி சம்ஸ்கிருதம் குறித்த புரிந்துணர்வை ஊட்டித் தமிழறிஞர்களின் தனித்தமிழ் மொழிக்கொள்கையில் குறிப்பிடத் தக்க மாற்றத்தை ஏற்படுத்த முயலும் ஆரம்ப நகர்வாக அமையும் வகையில் இவ்வாய்வின் இன்றைய தேவையை உணர்ந்துகொள்ள முடிகிறது.

## ஆய்வின் நோக்கம்

அண்மைக்காலமாக மாற்றமடைந்து வரும் ஆய்வு நோக்குகளும் மொழியியல் ரீதியா லான ஆழமான ஆய்வுகளும் பிற மொழிகளுடனான ஒப்பியல் ஆய்வுகளும் சம்ஸ்கிருதத்திற் குப் புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளன. சம்ஸ்கிருத மயமாதற் சிந்தனை, சம்ஸ்கிருதப் பண்பாட்டுச் சிந்தனை என்பனவும் புதிய ஆய்வுப் புலங்களாக இனங்காணப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வு களின் வழித்தடத்தைப் பின்பற்றி புறநானூற்றில் பொதிந்திருக்கும் சம்ஸ்கிருதச் சிந்தனைகளை யும் கருத்தியல்க ளையும் வெளிக்கொணர்தலே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும்.

## ஆய்வுமுறையியல்

இந்த ஆய்வினைப்பொறுத்த வரையில் ஆய்வுமுறைமையானது இலக்கியத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டமைந்த இலக்கிய ரீதியான ஒப்பீடுகளையும் மொழியிடைத் தொடர் புகளை எளிதில் விளக்கிக்கூறும் வகையில் விளக்கிக்கூறும் விபரணஆய்வு முறைமையில் அமைந்துள்ளது. ஆய்விற்கான மூலநூலாக சாமிநாத ஐயர் உ.வே. (1963) அவர்களால் பதிப் பிக்கப்பெற்ற புறநானூறு மூலமும் உரையும் ஆறாம் பதிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப் பிட்ட புறநானூற்றின் உள்ளடக்கத்தை முறையாக ஆராய்ந்து பெறப்பட்ட சிந்தனைக்கூறுகள் பல வற்றை இணைத்து ஆய்வின் முழுமையான பரிமாணத்தை வெளிக்கொணரும் வகையில் ஆய்வு முறைமையானது நெறிப்படுத் தப்பட்டுள்ளது.

## இலக்கிய மீளாய்வு

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கி யங்கள் குறித்த பல ஆய்வுகள் நடைபெற்றுள் ளன. இத்தகைய ஆய்வுகள் முன்னாய்வுகளாக இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டன. புற நானூற்றில் காணப்படும் தத்துவச்சிந்தனைகள் தொடர்பாக ஆங்கிலமொழியில் சுந்தரம்,பி.கே. (1979) என்ற அறிஞர் விரிவாக ஆய்வு செய்துள்ளார். இதையொத்த ஆங்கில மொழி யிலமைந்த புறநானூற்றை அடிப்படையாகக் கொண்ட தமிழ்வீரநிலைக் கவிதை தொடர்பாக கைலாசபதி, க (2006) விரிவாக ஆய்வுசெய்துள் ளார். தமிழின் பிறமொழித் தொடர்புகளை விளக்கும் புறநானூற்றின் மொழிநடை தொடர் பான ஆய்வொன்றினை தேவநேயர், ஞா (1944) மேற்கொண்டுள்ளார். சங்ககால இலக்கி யத்திற் கடவுட் கோட்பாடு தொடர்பாக சொக்க லிங்கம், க (1985) அவர்களின் ஆய்வில் காண முடிகிறது. இலங்கையில் சங்கஇலக்கியமும் சமூகமும் என்ற தொனிப்பொருளில் இந்துகலாச் சார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப் பட்ட ஆய்வரங்கில் பல அறிஞர்கள் சங்க இலக்கியங்கள் குறித்து ஆய்வுசெய்துள்ளனர். குறிப்பாக சங்ககாலமும் இலக்கியமும் - ஆய் வின் மாறும் பரி மாணங்கள் குறித்து சிவத்தம்பி கா. (2007) ஆய்வுசெய்துள்ளார்.

## வேதம், வேதியர் குறித்த செய்திகள்

அரசியலில் சம்ஸ்கிருதமயமாதல் எனப் பிற்காலத்தில் குறிக்கப்பட்ட அந்தணர்களின் அரசவைப் பிரதிநிதித்துவத்தினூடாகச் சம்ஸ் கிருத அறிஞர்களுக்கு அக்காலத்திலிருந்த மதிப் பினைப் புறநானூற்றில் கண்டுகொள்ள முடிகிறது. புறநானூற்றில் ஓரிடத்தில் ஓர் அரசன் தனது

நாடு முழுவதுமே பிரம்மதேய நிலங் களாக அந்தணர்களுக்குக் கொடுத்துவிட்டான். எனவே அவனுடைய நாட்டைக் கால் கொள்ள முடியாது. பகைவர்களும் கவரமுடியாது எனக் கூறப்படுகிறது.

"கழல் புனை திருந்தடிக் காரி நின் நாடே
அழல் புறந்த ரூஉம் அந்தணரவ்வே" (புறம். 122)

இதன்மூலம் வேதம் கற்ற அந்தணர்களின் அறிவு நுட்பத்தைக் கண்டுணர்ந்த மன்னர்கள் அவர்களைத் தங்கள் அரச வையில் தக்கவைத்துக் கொள்வதற்கான வழி முறைகளைச் செய் தமையும் அவர்கள் மீது இருந்த சமூக மதிப்பின் ஆழத்தையும் புற நானூறு ஆவணப் படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. இது தவிர

வேதம், நான்மறை, அந்தணர் போன் றவை வெறும் சொல்லாடலுக்காக அல்லாமல் கருத்தி யல் ரீதியாகப் பொருள் விளங்கும் வகையில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டி ருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகப் பலவற்றைக் கூறலாம்.

நான்மறை முதல்வர் சுற்ற மாக,
மன்னர் ஏவல் செய்ய, மன்னிய (புறம். 26)

நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!
வாடுக, இறைவ நின் கண்ணி! ஒன்னார் (புறம். 6)

அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி (புறம். 93)

ஆக்குரல் காண்பின் அந்த ணாளர்
நான்மறை குறித்தன்று அருளாகா மையின் (புறம். 362)

**வைதீக இலக்கியச் செய்திகள்**

வைதீக இலக்கியச் சிந்தனைகளும் கருத்துக்களும் அதனைச் சார்ந்த துறைகளும் சமயத் தமிழ் இலக்கியப் பரப்பில் கணிசமாக உள்வாங்கப்பட்டன. சங்ககாலத்தில் வேதத்தில் உள்ள சில கருத்துக்கள் பண்டைத் தமிழரின் அன்றாட வாழ்க்கையில் பின்னிப்பிணைந் திருந்த செய்தி புறநானூற்றின் வழியாகப் புலப்படுகிறது. வேள்வி வேட்டலைத் தமிழர் ஏற்றுக் கொண்ட தைப் புறநானூற்றில் நெட்டிமையார் பாடிய பாடலில் காணலாம்.

வேத வேள்வித் தொழில்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடையாளன (புறம்.224)

மேலும்
நற்பனுவல் நால் வேதத்து
அரும் சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாய்வுதி பொங்கப்பன் மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன் களோ (புறம்.15: 17, 21)
என்னும் அடிகளில் பாண்டிய மன்னர் வேள்வி செய்தமை விளக்கப்படுகிறது.

வேதங்கள் மட்டுமன்றி வேதாங்கங்கள் பற்றியும் சங்ககால மக்கள் அறிந்திருந்தனர். வேதக் கருத்துக்களை விளக்குவதற்குக் கருவிகளாக அமைந்துள்ள சமஸ்கிருத மொழியில

மைந்த வேதாங்கங்களான சிட்சை, வியாகர ணம், சந்தஸ், நிருக்தம்,சோதிடம், கல்பம் முதலிய வற்றிலிருந்த சிந்தனைகளையும் கருத் துக்களையும் உள்வாங்கி அதில் பயன்படும் சம்ஸ்கிருத மொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்திய சந்தர்ப்பங்களையும் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள் அரை இரவில்
முடப் பனையத்து வேர் முதலாக்
கடைக் குளத்துக் கயம் காயப்,
பங்குனி உயர் அழுவத்துத்,
தலை நாள்மீன் நிலை திரிய,
நிலை நாள்மீன் அதன்எதிர் ஏர்தரத்,
தொல் நாள்மீன் துறை படியப்,
பாசிச் செல்லாது, ஊசித் துன்னாது (புறம். 229)

இதன்பொருள் "ஒரு நாள். பங்குனி மாதம். அதன் உச்சநிலை உத்தர-மீன் நாளாக இருந்தது. அதற்குப் பின்னிலையில் எட்டாம் இடத்திலுள்ள மூல-மீன் அதன் திசையில் நின்றது. உத்தரத்துக்கு முன்னிலையில் எட் டாம் மீனாக விளங்கும் மிருகசீரிட-மீன் தாழ்ந்து கொண்டி ருந்தது. இது கீழ்த்திசை நோக்கியோ, வடதிசை நோக்கியோ சாயவில்லை. சித்திரை மாதத்தில் நான்கு கால்-பகுதியில் முதல்-கால்-பகுதியில் கார்த்திகை மீனுக்குரிய நாள் அது. அன்று அனுட-மீன் தோன்றிற்று. புனர்பூசம் மறைந்துகொண்டிருந்தது. நல்ல இருள். நள்ளிரவு. அப்போதுதான் எரிமீன் விழுந்தது. பார்த்துக் கணித்த புலவரும் பிறரும் அரசன் துன்பமின்றி வாழவேண்டுமே என்று வாழ்த்தினர். அவர் வாழ்த்துப் பலிக்கவில்லை. கணிப்புப் பலித்தது. அரசன் மாண்டான். அவனது யானையும் குதிரையும் கூட மாண்டன. அவன் மகளிர் கலங்கினர்." என்ற புறநானூற் றுப் பாடலில் சோதிடச் செய்தியைக்காணமுடிகிறது.

**புராணச் செய்திகள்**

சம்ஸ்கிருதத்தில் இதிகாச புராணங்கள் ஐந்தாவது வேதம் என்று சிறப்பிக்கப்படுவன. புராணங்கள் வேதங்களில் உள்ள கருத்து களைத் தெளிவாகக் கூறுவதற்கெனத் தோன்றி யவை. இவை கடவுள் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்தவும், கடவுளின் பெருமையை மனிதர் களின் மன தில் நிலைநாட்டும் பொருட்டும் புகழ் மிக்க அரசர்களின் வரலாறுகள், கடவு ளரின் அவதாரங்கள், கடவுளரின் லீலைகள் ஆகியவற்றைக் கூறுகின்றன. இப்புராணக் கருத்துக்கள் பல தமிழி லக்கியங்களில் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றன. தமிழ்ப் புராண இலக்கியங்கள் பெரும்பாலும் இவற்றைத் தழுவி இயற்றப்பெற்றுள்ளன. இவ்வகையில் சமஸ் கிருத புராணக்கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட ஆலகால விடத்தை அகில உலகமும் உய்ய சிவன் அமுதமாக எண்ணி அதனை உண்ட புராணக்கதையில் நஞ்சை அமுதாக உண்டமையால் கறையாகிய நீல மணிபோன்ற கழுத்தினைப் புறநானூற்றின் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல (புறம். 91)

மேலும் மேரு மலையை வில்லாகவும், வாசுகியென்னும் பாம்பை நாணாகவும், திரு மாலை அம்பாகவும் கொண்டு முப்புரங்களை எரித்தழித்ததாகப் புராணக்கதையில் வரும்

இறைவனின் அருட்செயலைப் புறநானூறு பின்வருமாறு கூறும்

“ஓங்குமலைப் பெருவில் பாம்புஞான கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த” (புறம். 55)

இவ்வகையில் புராணக்கருத்துக்கள் புறநானூற்றில் இடம் பெறுவதை அவதானிக்க முடிகிறது.

**இராமாயணச் செய்திகள்**

புறநானூற்றில் தேவையான இடங்களில் சம்ஸ்கிருத இதிகாசத்திலிருந்து பொருத்தமான செய்திகளை எடுத்துக்காட்டுக்களாகக் கூறி விளக்கும் பண்பினைக் காணமுடிகின்றது. சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட வான்மீகி இராமாயணக் கதைக் கூறுகள் கம்பன் காலத் திற்கு முன்பு தோன்றிய புறநானூறில் சிறு சிறு குறிப்புகளாக இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இராவணன் சீதை யைக் கவர்ந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை, (புறம் - 378)

இப்பாடலில் “பொருநன் அவனுடைய வஞ்சித் துறையைப் பாடி நின்றபோது மன்னர் வழங் கிய கொடையிலிருந்த அணிகலன்களைப் பொருநனுடைய சுற்றத்தினர் விரலில் அணி வனவற்றைச் செவியிலும், செவிக்குரிய வற்றை விரலிலும், அரைக்குரியவற்றைக் கழுத்திலும், கழுத்தணியை இடையிலும் வகை தெரியாது அணிந்து, காண்பார் கைகொட்டி நகைக்குமாறு விளங்கினர் அவர் செய்கை, பண்டு இராமனுடன் போந்த சீதையை இரா வணன் தூக்கிச் சென்றபோது அவள் கழற்றியெ றிந்த அணிகலன்களைக் குரங்கினம் அணிந்து கொண்டது போல இருந்தது” என வர்ணிக் கிறார்.

**மகாபாரதச் செய்திகள்**

புறநானூற்றில் முற்பகுதியில் சமஸ்கிருத இதிகாசமான மகாபாரதப் போர் குறித்த செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. பாட்டுடைத்தலை வனான உதியஞ் சேரலாதன் மகாபாரதப் போரு டன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறான். அவனது கொடைத்திறத்தினைப் புகழுமிடத்தில் இக்குறிப் பைக் காணலாம்.

வான வரம்பனை! நீயோ, பெரும!
அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ,
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது, களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்! (புறம். 2)

என வரும் வரிகளில் பாரதப் போரின் போது பாட்டுடைத் தலைவனான மன்ன்ன் பாண்ட வர்கள் கௌரவர்கள் ஆகியோருக்குச் சோறளித்த வரலாற்றுச்செய்தியைப் புலவர் குறிப்பிடுகிறார். இக்கருத்தினை சாமுவேல் ஜா.ஜி (1985) என்ற அறிஞரும் தனது நூலில் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.

**பகவத்கீதைச் சிந்தனைகள்**

சுந்தரம், பி.கே (1979) என்ற அறிஞரது புறநானூற்றில் காணப்படும் தத்துவச் சிந்தனைகள் தொடர்பான தனது ஆய்வில் கணியன் பூங்குன்றனார் பாடியதாகக் குறிப்பிடப்படும் பெரியோர்

சிறியோர் குறித்த புறநானூற்றுப் பாடலோடு அறிவுடையோர் குறித்த பகவத்கீதைப்பாடலை ஒப்பிட்டுக் காட்டுகின்றார். யாதும் ஊரே யாவரும் கேளிர் எனத்தொடங்கும் அப்பாடலில்

காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறம். 192)

எனப் பாடியுள்ளார். இதில் வருகின்ற "செல்வத்தாற் பெரியவரை மதித்தலும் செய் யோம் சிறியாரை இகழ்தலும் செய்யோம்" என்ற சிந்தனை பகவத்கீதையின் ஐந்தாவது அத்தி யாயத்தில் வரும் வித்யா விநய என ஆரம் பிக்கும்' பாடலில் "கல்வியும் பணிவும் கொண்ட ஓர் அந்தணன், ஒரு பசு, ஒரு யானை, ஒரு நாய், ஒரு சண்டாளன் ஆகியோர் மீது சமமான பார்வையையே அறிவுடையோர் செலுத்து கின்றனர்" என்ற சிந்தனையோடு ஒத்தமை வதைக் காணலாம். இதனடிப் படையில் கால ஆராய்ச்சிகள் கடந்த நிலையில் சம்ஸ்கிருத தத்துவநூலான பகவத்கீதையின் சிந்தனைகள் புற நானூற்றில் புரையோடியிருப்பது தெளி வாகிறது.

### சிவாகமச் செய்திகள்

புறநானூற்றுப் பாடலில் காரிகிழார் எனும் புலவர் முதுகுடுமிப்பெருவழுதியான பாண்டிய மன்னனை வர்ணிக்கும் போது "நின் கொற்றக் குடை முனிவர்களாலே போற்றப்படும் முக்கட் செல்வரான சிவபெருமானின் கோயிலை வலம் வரும் பொழுது தாழ்வதாக" என்கின்றார்.

பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்,
பணியியர் அத்தை நின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலஞ் செயற்கே! (புறம். 6)

வேதவழிபாட்டுநெறியோடு ஆகம வழி பாட்டுநெறியான கோவில் வழிபாட்டிலும் ஈடு பட்டு முக்கட்செல்வரை வணங்குவதையும் பெருவழுதி கடைப்பிடித்தான் என்பது இப்பாடல் மூலம் தெரியவருகிறது எனச் சங்க இலக்கியத் தில் கடவுட்கோட்பாடு குறித்தஆய்வில் சொக்கலிங்கம் (1985) குறிப்பிடுகிறார். இதன்படி சம்ஸ்கிருத மொழியிலமைந்த சிவாகம வழி பாட்டுமுறை குறித்த செய்தி புறநானூற்றில் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

### சொற்களின் தற்சமப் பயன்பாடு

தமிழ்ச்சொற்களைச் சம்ஸ்கிருத எழுத்துரு வோடும் உச்சரிப்போடும் மிகுதியாய்க் கலந்து மணிப்பிரவாளர் நடை தோற்றம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூற்றுக் காலத்தில் சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகச் சமஸ் கிருதச் சொற்கள் தமிழில் பயன்படுத்தப் படும் போது தமிழ் ஒலியமைப்பு முறைக்குப் பொருந்தி வருவன வற்றைத் தற்சமம் என்று கூறுவர். இத்தகைய தற்சம சம்ஸ்கிருதச் சொற்பயன் பாட் டிற்குப் புறநானூற்றின் பல பாடல்களில் எடுத்துக் காட்டுகளைக் கண்டு கொள்ளலாம்.

உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத (புறம்.182)

எனவரும் வரிகளில் தேவர்களைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதப் பொதுச் சொல்லான இந்திரர் என்ற சொல் மாற்றமின்றி இந்திரர் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

'எருதே இளைய் நுகம் உண ராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே (புறம். 102)

எனவரும் வரிகளில் வண்டியைக் குறிக் கப்பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான சகடம் என்ற சொல் மாற்றமின்றி சகடம் என்றே பயன் படுத்தப்பட்டுள்ளது.

நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிலைந்து,
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி, (புறம். 77)

எனவரும் வரிகளில் வில்லினைக் குறிக் கப்பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான சாபம் என்ற சொல் மாற்றமின்றி சாபம் என்றே பயன் படுத்தப்பட்டுள்ளது.

மைம் மீன் புகையினும், தூமம் தோன்றினும்,
தென் திசை மருங்கின் வெள்ளி ஓடினும் (புறம். 117)

எனவரும் வரிகளில் புகையினைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான தூம என்ற சொல் மாற்றமின்றி தூம என்றே பயன் படுத்தப்பட்டுள்ளது.

நஞ்சுடை வால் எயிற்று, ஐந்தலை சுமந்த,
வேக வெந்திறல், நாகம் புக்கென, (புறம். 37)

எனவரும் வரிகளில் பாம்பினைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான நாகம் என்ற சொல் மாற்றமின்றி நாகம் என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

படுவது உண்டு, பகல் ஆற்றி,
இனிது உருண்ட சுடர் நேமி (புறம். 17)

எனவரும் வரிகளில் சக்கரத்தைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான நேமி என்ற சொல் மாற்றமின்றி நேமி என்றே பயன் படுத்தப்பட்டுள்ளது.

காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்
போகுபலி வெண்சோறு போலத் (புறம். 331)

எனவரும் வரிகளில் அர்ப்பணிக்கப்பட்ட பொருளைக் குறிக்கப் பயன்படும் பலி என்ற சொல் பலி என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்,
போகம் வேண்டிப், பொதுச்சொல் பொறாஅது (புறம். 8)

எனவரும் வரிகளில் இன்பச்சுகத்தைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான போகம் என்ற சொல் மாற்றமின்றி போகம் என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

பருதி உருவின் பல்படைப் புரிசை,
எருவை நுகர்ச்சி, யூப நெடுந்தூண் (புறம். 224)

எனவரும் வரிகளில் வேள்வித்தூணைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான யூபம் என்ற சொல் மாற்றமின்றி யூபம் என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

### சொற்களின் தற்பவப் பயன்பாடு

சம்ஸ்கிருதச் சொற்களைத் தமிழில் ஒலி பெயர்த்து எழுதும்பொழுது மூலமொழிக்கும், ஒலிபெயர்ப்பு மொழிக்கும் பொதுவாக இல்லா மல் சம்ஸ்கிருத மொழிக்கே உரிய சிறப்பு எழுத் துக்கள் இருப்பின் அவற்றை நீக்கிவிட்டுத் தமி ழுக்குப் பொருந்தி வரக்கூடிய எழுத்துக்க ளைக்

கொண்டு அந்தச் சொற்களை அமைக்கும் முறையைத் தற்பவம் எனத் தமிழில் கூறுவர். இத்தகைய மூலமொழியாகிய சம்ஸ்கிருத மொழிச் சொற்களின் வடிவம் சிதைந்து தமிழில் தற்பவமாக வழங்கப்படும் சமஸ்கிருதச் சொற் பயன்பாட்டினைப் புறநானூற்றின் பல இடங்களில் காணலாம்.

அவி உணவினோர் புறங் காப்ப,
அற, நெஞ்சத்தோன் வாழ, நாள் என்று, (புறம். 377)

எனவரும் வரிகளில் அவிப்பொருளைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான ஹவிஸ் என்ற சொல் அவி என்று பயன்படுத்தப் பட்டுள்ளது.

புன்தலை மடப்பிடி நாணக்,
குஞ்சரம் எல்லாம் புறக்கொடுத் தனவே. (புறம். 308)

எனவரும் வரிகளில் யானையைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான குஞ்ஜரம் என்ற சொல் குஞ்சரம் என்று பயன் படுத்தப்பட்டுள்ளது.

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும், (புறம். 189)

எனவரும் வரிகளில் இரவினைக் குறிக் கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான ஜாமம் என்ற சொல் யாமம் என்று பயன்படுத்தப்பட் டுள்ளது.

வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்,
போர்ப்புறு முரசும் கறங்க, (புறம். 241)

எனவரும் வரிகளில் இந்திரனின் ஆயுத மான வஜ்ராயுதத்ததைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான வஜ்ரம் என்ற சொல் வச்சிரம் என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

பொழிலகம் பரந்த பெருஞ்செய் ஆடவர்
செருப்புகன்று எடுக்கும் விசய வெண்கொடி (புறம். 362)

எனவரும் வரிகளில் வெற்றியைக் குறிக்கப் பயன்படும் சம்ஸ்கிருதச்சொல்லான விஜயம் என்ற சொல் விசயம் என்று பயன்படுத் தப்பட்டுள்ளது.

இவற்றினூடாகப் புறநானூற்றில் தற்ப வம்,தற்சமம் என இரண்டையும் கலந்து பயன் படுத்தியுள்ளமையை அறிந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை**

முடிவாக நோக்குமிடத்து வைதீக இலக் கியச் சிந்தனைகளும் கருத்துக்களும் வேதாங் கங்கள் பற்றியும் புறநானூற்றில் குறிப்பிடப்பட் டுள்ளதை நாம் காணமுடிகிறது. புறநானூற்றில் தேவையான இடங்களில் சம்ஸ்கிருதப் புரா ணங்களிலிருந்தும் இதிகாசங்களிலிருந்தும் தத்துவ நூல்களிலிருந்தும் பொருத்தமான செய்தி களை எடுத்துக்காட்டிக் கூறி விளக்கும் பண்பினைக் காணமுடிகின்றது. அத்துடன் சம்ஸ் கிருத மொழியிலமைந்த சிவாகம வழிபாட்டுமுறை குறித்த செய்தியும் புற நானூற்றில் இடம்பெற்றிருப்பதை அவதானிக்க லாம். மேலும் மணிப்பிரவாளர் நடை தோற்றம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூற்றுக்காலத்தில் சம்ஸ்கிருதச் சொற்கள் பல தமிழில் தற்பவம்,தற்சமம் என்ற இருநிலை களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் வாறாகப் புறநானூற்றின் உள்ளடக்கத்தை முறையாக ஆராய்ந்து பெறப்பட்ட சிந்தனைக்கூறுகள் பலவற்றில் கூறப்பெற்றுள்ள - இடம்பெற்றுள்ள - சம்ஸ்கிருத சிந்தனைகளை இவ்வாய்வின் வழி

யாகக் கண்டுகொள்ள முடிவதுடன் முன்னர் குறிப்பிட்டது போல சம்ஸ்கிருதமும் தமிழும் இணைத்து வளர்க்கப்படவேண்டிய காலத்தை நோக்கிய மீள்பயணத்திற்கான தொடக்கப் புள்ளி யாகவும் இந்த ஆய்வு அமைகிறது.

## உசாத்துணை நூல்கள்


* கைலாசபதி.க., (2006), தமிழ்வீரநிலைக் கவிதை, குமரன் பதிப்பகம், கொழும்பு
* சாமிநாதையர்.உ.வே., (1894), புறநானூறு மூலமும் உரையும், சென்னை
* சாமிநாதையர்.உ.வே., (1963), எட்டுத்தொகையுள் எட்டாவதாகிய புறநானூறு மூலமும் உரையும் 6ம் பதிப்பு, சென்னை
* சாமுவேல்.ஜா.ஜி., (1985), கலையும் கலைக்கோட்பாடுகளும் (2ம். பதிப்பு),விஜய்பிறின்ட் சேர்வீஸஸ், சென்னை
* சிவத்தம்பி.கா., (2007),சங்கஇலக்கியமும் சமூகமும் (ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு): இந்துகலாச்சார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு
* சுந்தரம்.பி.கே., (1979),Some philosophical concepts in purananunru,Universityof Madras ,Madras
* சொக்கலிங்கம்.க., (1985), சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.- மணிவிழாச்சபை வெளியீடு, தெல்லிப்பழை
* தேவநேயர்.ஞா.,(1944),புறநானூற்றுச் சொற்பொழிவுகள்.- சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி